செ.வெ.எண் :01/டிசம்பர் நாள் : 01.12.2020

**இராமநாதபுரம் மாவட்டம்**

**கடலோர கிராமங்களான பாம்பன், தங்கச்சிமடம் பகுதிகளுக்கு**

**மாவட்ட கண்காணிப்பு அலுவலர் திரு.தர்மேந்திர பிரதாப் யாதவ்,இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.தினேஷ் பொன்ராஜ் ஆலிவர்,இ.ஆ.ப., அவர்கள் ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு.**

இந்திய வானிலை ஆய்வு மையத்தின் கனமழை அறிவிப்பை தொடர்ந்து இன்று (01.12.2020) இராமநாதபுரம் மாவட்ட கடலோர கிராமங்களான பாம்பன், தங்கச்சிமடம் பகுதிகளுக்கு மாவட்ட கண்காணிப்பு அலுவலர் திரு.தர்மேந்திர பிரதாப் யாதவ்,இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.தினேஷ் பொன்ராஜ் ஆலிவர்,இ.ஆ.ப., அவர்கள் ஆகியோர் எளிதில் மழைநீர் தேங்கக்கூடிய தாழ்வான பகுதிகள் மற்றும் பல்நோக்கு புயல் பாதுகாப்பு மையங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ள பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை குறித்து ஆய்வு செய்தார்கள்.

குறிப்பாக, பாம்பன் கடற்கரை பகுதி, பாம்பனில் உள்ள பாதுகாப்பு மையம், தங்கச்சிமடம் அருகே உள்ள அய்யன்தோப்பு ஆகிய பகுதிகளுக்கு கு மாவட்ட கண்காணிப்பு அலுவலர் அவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் ஆகியோர் நேரடியாகச் சென்று பார்வையிட்டனர்.

தொடர்ந்து, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது:

இந்திய வானிலை ஆய்வு மையம், தென்கிழக்கு வங்கக் கடலில் உருவாகியுள்ள காற்றழுத்த தாழ்வு மண்டல பகுதியானது புயலாக மாற வாய்ப்புள்ளதால் இராமநாதபுரம் மாவட்டத்தில் 02.12.2020 முதல் 05.12.2020 வரையிலான நாட்களில் கனமழை முதல் அதிகனமழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும், அதிக வேகத்துடன் காற்று வீசக்கூடும் எனவும் முன்னெச்சரிக்கை அறிவிப்பு வெளியிட்டுள்ளது. அதனடிப்படையில், இராமநாதபுரம் மாவட்டத்தில் கனமழையை எதிர்கொள்ள ஏதுவாக பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன. மாவட்டத்தில் 180 கடற்கரை கிராமங்கள் உள்ளன. எளிதில் மழைநீர் தேங்கக்கூடிய பகுதிகளாக 39 இடங்கள் கண்டறியப்பட்டுள்ளன. இப்பகுதிகளில் துணை ஆட்சியர் நிலை அலுவலர் தலைமையில் மண்டல குழுக்கள் அமைக்கப்பட்டு பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை தீவிரப்படுத்திட உத்தரவிடப்பட்டுள்ளது.

மேலும், அவசரகால சூழ்நிலையை கருத்தில் கொண்டு பொதுமக்களை பாதுகாப்பாக தங்க வைத்திட 23 பல்நோக்கு புயல் பாதுகாப்பு மைய கட்டடங்கள் உட்பட திருமண மண்டபங்கள், பள்ளி கட்டடங்கள் என மொத்தம் 197 நிவாரண மையங்கள் தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ளன. இம்மையங்களில் பொதுமக்களுக்கு தேவையான குடிநீர் வசதி, உணவு வசதி, மின்சார வசதி, கழிப்பறை வசதி போன்ற அடிப்படை வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அவசர சூழ்நிலைக்கேற்ப தாழ்வான பகுதிகளில் வசிக்கும் பொதுமக்களை அருகே உள்ள நிவாரண மையங்களில் பாதுகாப்பாக தங்க வைத்திட உரிய நடவடிக்கை மேற்கொள்ள அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

மேலும், மீனவர்கள் மீன்பிடிக்க கடலுக்குள் செல்ல வேண்டாமென உத்தரவிடப்பட்டுள்ளது. பாம்பன் கடற்கரை பகுதியில் உள்ள மீனவர்களின் மீன்பிடி படகுகளை வடகடல் பகுதியிலிருந்து படகுகளை பாம்பன் தூக்கு ரயில்பாலம் வழியாக தென்கடல் பகுதிக்கு பாதுகாப்பாக கொண்டு நிறுத்திட மாவட்ட நிர்வாத்தின் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. பேரிடர் மேலாண்மை பணிகள் தொடர்பாக அமைக்கப்பட்டுள்ள 15 மண்டல அளவிலான குழு அலுவலர்கள் அனைவரும் தொடர்ந்து விழிப்புடன் களப்பணியில் ஈடுபட உத்தரவிடப்பட்டுள்ளது. அந்த வகையில், கனமழையை எதிர்கொள்ள அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் மாவட்ட நிர்வாகத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

முன்னதாக, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பாம்பன் அருகே உள்ள சின்னப்பாலம், பாம்பன் மீன்பிடி இறங்குதளம், தங்கச்சிமடம், பேய்க்கரும்பு மற்றும் கரையூர் ஆகிய இடங்களில் உள்ள பல்நோக்கு புயல் பாதுகாப்பு மையங்கள் ஆகியவற்றிற்கு நேரில் சென்று முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வுகளின்போது, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.இ.கார்த்திக்,இ.கா.ப., கூடுதல் ஆட்சியர்/திட்ட இயக்குநர் (ஊரக வளர்ச்சி முகமை) திரு.மா.பிரதீப்குமார்,இ.ஆ.ப., இராமநாதபுரம் சார் ஆட்சியர் டாக்டர் என்.ஓ.சுகபுத்ரா,இ.ஆ.ப., மீன்வளத்துறை துணை இயக்குநர் திரு.த.பரிதிஇளம்வழுதி, இராமேஸ்வரம் நகராட்சி ஆணையாளர் திரு.இராமர், வட்டாட்சியர்கள் திரு.ஜெயச்சந்திரன், திரு.அப்துல்ஜபார் உட்பட அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**